

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, 2011ஆம் ஆண்டிற்கு முன்பு பணி நியமனம் பெற்று தற்போது ஆசிரியராக பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது குறித்தும், ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அச்ச உணர்வினை போக்கும் வகையில் தனது தலைமையில் பல்வேறு ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது குறித்தும், அக்கூட்டத்தில் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவித்த கருத்துகளை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை பெற்றார். அப்போது முதலமைச்சர், ஆசிரியர்களின் நலன் காத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், திராவிட மாடல் அரசு எந்த சூழ்நிலையிலும் ஆசிரியர்களைக் கைவிடாது என்றும் உறுதியளித்தார். இச்சந்திப்பின்போது, மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. உடனிருந்தார்.





விழுப்புரம் மாவட்டத்தில் வருகை புரிந்த தமிழ்நாட்டில் நவம்பர் 28 முதல் டிசம்பர் 10 வரை சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ள ”உலகக் கோப்பை 2025 ஜூனியர் ஹாக்கி ஆண்கள் பிரிவுக்கான கோப்பை அறிமுக விழாவில் கழக துணை பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. உலக கோப்பையை அறிமுகம் செய்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், தயா. இளந்திரையன், கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், சித்திக் அலி, NN.இளங்கோ, வாலிபால் மணி, செ.தினகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஈரோடு மத்திய மாவட்டம்

# பவானி, பெருந்துறை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பவானி வடக்கு, பவானி தெற்கு, பவானி மத்திய அம்மாபேட்டை கிழக்கு, அம்மாபேட்டை மத்திய, அம்மாபேட்டை தெற்கு - பெருந்துறை கிழக்கு, பெருந்துறை மேற்கு, பெருந்துறை வடக்கு, பெருந்துறை தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் - பவானி வடக்கு, பவானி தெற்கு ஆகிய நகரங்களுக்குட்பட்ட வட்டங்கள் விவரம் மற்றும் ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், ஈரோடு மத்திய மாவட்டம், பவானி, பெருந்துறை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பவானி வடக்கு, பவானி தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் **பவானி வடக்கு, பவானி தெற்கு, பவானி மத்திய** ஆகிய 3 ஒன்றியங்களாகவும் – அம்மாபேட்டை மத்திய, அம்மாபேட்டை தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் **அம்மாபேட்டை கிழக்கு, அம்மாபேட்டை மத்திய, அம்மாபேட்டை தெற்கு** ஆகிய 3 ஒன்றியங்களாகவும் – பெருந்துறை கிழக்கு, பெருந்துறை மத்திய, பெருந்துறை வடக்கு, பெருந்துறை தெற்கு ஆகிய ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டு, **பெருந்துறை கிழக்கு, பெருந்துறை மேற்கு, பெருந்துறை வடக்கு, பெருந்துறை தெற்கு** ஆகிய ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

அதோடு, பவானி நகரம் **பவானி வடக்கு, பவானி தெற்கு** ஆகிய இரண்டு நகரங்களாக பிரிக்கப்பட்டு, அந்த நகரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றிய – நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு அந்தந்த ஒன்றிய மற்றும் நகரங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**பவானி வடக்கு ஒன்றியம்** : 1.குருப்பநாயக்கன்பாளையம், 2.ஆண்டிகுளம், 3.சின்னபுலியூர், 4.பெரியபுலியூர், 5.ஆலந்தூர், 6.ஓரிச்சேரி ஆகிய 6 ஊராட்சிகள் மற்றும் ஜம்பை பேரூர்.

**பவானி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.ஏ.சேகர்,** 2/1087, வடக்கு தெரு, கே.என்.பாளையம் அஞ்சல், பவானி – 638 301.

**பவானி தெற்கு ஒன்றியம்** : 1.வைரமங்கலம், 2.ஓடத்துறை, 3.கவுந்தப்பாடி ஆகிய 3 ஊராட்சிகள் மற்றும் சலங்கைபாளையம் பேரூர்.

**பவானி தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.பி. துரைராஜ்** ,4/26சி, கவுண்டன்புதூர், குட்டிபாளையம், பவானி

**பவானி மத்திய ஒன்றியம்** : 1.பருவாச்சி, 2.மைலம்பாடி, 3.சன்யாசிபட்டி, 4.வராதநல்லூர், 5.புன்னம், 6.தொட்டிபாளையம் ஆகிய 6 ஊராட்சிகள் மற்றும் ஆப்பக்கூடல் பேரூர்.

**பவானி மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : மகேந்திரன்,** மயிலம்பாடி, பவானி.

**அம்மாபேட்டை கிழக்கு ஒன்றியம்** : 1.பூதப்பாடி, 2.பட்லூர், 3.ஒட்டபாளையம், 4.கல்பாவி ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் ஒலகடம் பேரூர்.

**அம்மாபேட்டை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : ப. அறிவானந்தம்,** 377, பூதப்பாடி, அந்தியூர் அஞ்சல் ஈரோடு.

**அம்மாபேட்டை மத்திய ஒன்றியம்** : 1.குருவரெட்டியூர், 2.கன்னப்பள்ளி, 3.அட்டவணைப்புதூர், 4.முகாசிப்புதூர் ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் நெரிஞ்சிப்பேட்டை, அம்மாபேட்டை 2 பேரூர்கள்.

**அம்மாபேட்டை மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : த. அசோக் குமார்,** 255–எல், மாருதி நகர், குருவரெட்டியூர் அஞ்சல், அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

**அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்** : 1.சிங்கம்பேட்டை, 2.படவல் கால்வாய், 3.பூனாச்சி, 4.காடப்பநல்லூர், 5.மாணிக்கம்பாளையம், 6. கேசரிமங்கலம், 7.குறிச்சி ஆகிய 7 ஊராட்சிகள்.

**அம்மாபேட்டை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.வி.சுந்தரம்** , 264, கிருஷ்ணாபுரம், கேசரிமங்கலம், அம்மாபேட்டை, ஈரோடு மாவட்டம்.

**பெருந்துறை கிழக்கு ஒன்றியம்** : 1.பாண்டியம்பாளையம், 2.சிங்காநல்லூர், 3.முள்ளம்பட்டி, 4.கந்தாம்பாளையம், 5.பெரியவிளாமலை ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் பள்ளப்பாளையம், காஞ்சிகோவில், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி ஆகிய 4 பேரூர்கள்.

**பெருந்துறை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : சி. பெரியசாமி,** 1/30, எம்.ஓலப்பாளையம், முள்ளம்பட்டி அஞ்சல், ஈரோடு

**பெருந்துறை மேற்கு ஒன்றியம்** : 1.விஜயபுரி, 2.கம்புளியம்பட்டி, 3.திருவாச்சி, 4.துடுப்பதி ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

**பெருந்துறை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் : எஸ்.பிரகாஷ்,** 91, அரியாங்காடு, சோளிபாளையம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

**பெருந்துறை வடக்கு ஒன்றியம்** : 1.தோரணவாவி, 2.வெட்டையன் கிணறு, 3.திங்களூர், 4.மடத்துப்பாளையம், 5.கருக்குப்பாளையம், 6.நிச்சாம்பாளையம், 7.செல்லப்பம்பாளையம், 8.கல்லாகுளம், 9.சீனாபுரம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**பெருந்துறை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : பால். சின்னுசாமி,** 261, ஆயிக்கவுண்டன்பாளையம்,சீனாபுரம், ஈரோடு மாவட்டம்.

**பெருந்துறை தெற்கு ஒன்றியம்** : 1.போலநாயக்கன்பாளையம், 2.பாப்பம்பாளையம், 3.சின்னவீரசங்கிலி, 4.பெரியவீரசங்கிலி, 5. கராண்டிபாளையம், 6.மேட்டுப்புதூர், 7.மூங்கில்பாளையம், 8.பொன்முடி, 9.குள்ளம்பாளையம், 10.பட்டக்காரம்பாளையம், 11.சுள்ளிபாளையம் ஆகிய 11 ஊராட்சிகள்.

**பெருந்துறை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் :ப.செல்வராஜ்,** 2/103, தேரடி தோட்டம், மூங்கில்பாளையம், விஜயமங்கலம், ஈரோடு மாவட்டம்.

**பவானி வடக்கு, பவானி தெற்கு நகரங்கள்**

**பவானி வடக்கு நகரம்** : 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12,13 ஆகிய 13 வார்டுகள்.

**பவானி வடக்கு நகர பொறுப்பாளர் : எஸ்.கே.விஜய்ஆனந்த்** 90, எஸ்கேஎன் அப்பார்ட்மெண்ட், 5வது வீதி, வர்ணன்புறம், பவானி–638 310.

**பவானி தெற்கு நகரம்** : 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24 ,25, 26, 27 ஆகிய 14 வார்டுகள்.

**பவானி தெற்கு நகர பொறுப்பாளர் : ப.சீ. நாகராஜன்,** 43, பழைய பஞ்சாயத்து ரோடு,பவானி – 638 301.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்: 22.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## குடியரசுத் தலைவர் – ஆளுநர்களுக்கான காலக்கெடுவை

# உச்சநீதிமன்றம் உறுதி செய்திருக்க வேண்டும்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, நவ.23–

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில், ஆளுநர்கள் மற்றும் குடியரசுத்தலைவருக்கான காலக்கெடுவை உச்சநீதிமன்றம் உறுதி செய்திருக்கவேண்டும் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

மாநில சட்டப்பேரவைகள் நிறைவேற்றும் மசோதாக்கள் மீது முடிவெடுக்க மாநில ஆளுநர்கள் மற்றும் குடியரசுத்தலைவருக்கு நீதித்துறை காலக்கெடு நிர்ணயிப்பது பொருத்தமற்றது என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விளக்கமளித்துள்ளது குறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.



THE HINDU

**Blow to States**

The Supreme Court should have upheld timelines for Governors and President

By holding that the judiciary cannot fetter Governors and the President to "one-size-fits-all" timetables or usurp their functions by assuming "deemed consent" of proposed Bills by States, and also clarifying that these authorities cannot resort to "prolonged and evasive inaction", the Supreme Court's answer to the 16th Presidential Reference appears as a constitutional balancing act. But, substantively, it is a blow to federalism as it effectively allows Governors unchecked powers to block or delay State legislation without constitutional accountability. This opinion contradicts a progressive judgment in April 2025 that had prescribed three-month timelines and used Article 142 to grant deemed assent to some Bills passed in the Tamil Nadu Assembly. The Court invoked separation of powers to reject timelines and Article 142's use, but this empowers Governors at the cost of

அதில், உச்சநீதிமன்றத்தின் இந்த கருத்தானது 16வது குடியரசுத்தலைவரின் குறிப்புக்கு உச்சநீதிமன்றத்தின் விளக்கம், ஒரு அரசியலமைப்பு சமநிலைப்படுத்தும் செயலாகத் தோன்றுவதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு கூறியுள்ளது. மசோதாக்கள் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தின் கருத்து மாநில அரசுகள் மீதான தாக்குதல் மட்டுமல்ல கூட்டாட்சி மீதான தாக்குதல் என்று விமர்சித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் இந்த விளக்கமானது, ஆளுநர்களின் கட்டுப்படுத்தப்படாத அதிகாரங்கள், மாநில சட்டத்தைத் தடுக்கவோ அல்லது தாமதப்படுத்தவோ அனுமதிப்பதாகவும், உச்சநீதிமன்றத்தின் கருத்து, ஆளுநருக்கு எதிரான வழக்கில், கடந்த ஏப்ரல் 8 ஆம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்புக்கு முரணாக உள்ளதாகவும் தெளிவுப்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த கருத்தானது மாநில உரிமைகளை ஆளுநர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உள்ளதாகவும், மசோதாக்களுக்கு காலக்கெடு நிர்ணயிப்பது குறித்து ஆளுநர்களுக்கு பரிந்துரைக்கவில்லை என்றும் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அரசியல் சாசனப்பிரிவு 200 மற்றும் 201 ஆகியவற்றின் கூற்றுப்படி, மசோதாக்கள் மீது ஆளுநர் தனது முடிவை முடிந்தவரை விரைவில் அறிவிக்க வேண்டும் என்று கூறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளுநர்கள் அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப்பட தேவையில்லை என்று உச்சநீதிமன்றத்தன் கூற்று அரசியலமைப்புக்கு முரணாக உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மசோதாக்கள் விவகாரத்தில் குடியரசுத் தலைவர், நீதிமன்றத்தை கலந்தாலோசிக்கத் தேவையில்லை என்பது மசோதாக்களை காலவரமின்றி தேக்கமடைய செய்யும் என்றும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றுவதற்கு சட்டமன்றத்திற்கு எந்த வழியும் இல்லாத சூழல் ஏற்படும் என்றும் the hindu ஆங்கில நாளேடு கூறியுள்ளது.

ஒரு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்ப வேண்டும் என்பதற்கான எந்த வழிகாட்டுதலையும் உச்சநீதிமன்றம் வழங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள ‘தி இந்து’ மசோதாக்கள் விவகாரத்தில் மாநில அரசுகளை சட்டப்போராட்டங்களில் ஈடுபட கட்டாயப்படுத்தும் வகையில் உச்சநீதிமன்றத்தின் விளக்கம் அமைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் இந்த கருத்தானது எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அண்மையில் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கு எதிராக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, ஆளுநர்கள் மற்றும் குடியரசுத்தலைவருக்கான காலக்கெடுவை உச்சநீதிமன்றம் உறுதி செய்திருக்கவேண்டும் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தீட்டியுள்ள தலையங்கத்தில் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண் 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) பணிமனை நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு தொ.மு.ச. பேரவையின் பொருளாளர் **திரு. கோ.சி.வள்ளுவன்** அவர்கள் மேலிடப் பார்வையாளராகவும், வழக்கறிஞர் **திரு. அ.சரவணன்,** கழக தணிக்கைக் குழு உறுப்பினர் அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டு தேர்தல் கால அட்டவணை 18.10.2025 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி வேட்பு மனுக்கள் பெறப்பட்டு பரிசீலனை முடிந்த நிலையில் சில நிர்வாக காரணங்களால் மறு அட்டவணை வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதன்படி கீழ்க் கண்டவாறு மறு அட்டவணை வெளியிடப்படுகிறது.

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**
**தேர்தல் கால மறு அட்டவணை**

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனை வாரியாக) - 08.12.2025 காலை 11.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 18.12.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள்தோறும்) - 25.12.2025 காலை 11.30 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) - 30.12.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தேர்தல் தொடர்பான இதர அறிவிப்புகளில் மாற்றம் ஏதுமில்லை.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்- 21-11-2025.

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச.பேரவை

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

# இராதாபுரம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழகநிர்வாகவசதிக்காகவும்–கழகப்பணிகள்செவ்வனேநடைபெற்றிடவும் கடந்த 30.05.2025 அன்று திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் தெற்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டு, அதற்கு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறு பிரிக்கப்பட்ட இராதாபுரம் தெற்கு ஒன்றியக்கழகப்பணிகள்செவ்வனேநடைபெறபொறுப்புக்குழுஉறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**இராதாபுரம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:
1. சூ.அ. ஜோசப், 72/3, மேலத் தெரு, உவரி
2. டி.தனபால்,10–98,இராமன்குடி, கரைச்சுத்துநவ்வலடி.
3. திருமதி எல். சரஸ்வதி, 12, டாட்டா குடியிருப்பு, கூட்டப்பனை.
4. சி. மயில்ராஜ், 11, தத்துவநேரி, கரைச்சுத்து நவ்லடி.
5. ஆ. முருகன், 7/62, தெற்கு தெரு, உதயத்தூர்.
6. மா. செந்தாமரைகண்ணா, 5/23, பார்க்கநேரிகீழூர், திருவம்பலாபுரம்
7. சந்திரசேகர், 5/163, மாளவியா பள்ளித் தெரு, கூடங்குளம்.
8. எஸ்.ஐ. சிங், மேற்கு தெரு, இடிந்தகரை, விஜயாபதி.
9. பி. பரமசிவம், 5/26, பார்க்கநேரிகீழூர், திருவம்பலாபுரம்

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்: 22.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

## நவம்பர் 23 (2012)



பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, 1956ஆம் ஆண்டு பூலாவரி கிளைக் கழகச் செயலாளராக, வட்டக் கழக பிரதிநிதியாக, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக, பின்னர் பொதுக்குழு உறுப்பினராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 38 ஆண்டுகள் சேலம் மாவட்டக் கழகச் செயலாளராக தொய்வின்றி பணியாற்றி வந்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் – சட்டநகல் எரிப்புப் போராட்டம் ஆகியவற்றில் தலைமை ஏற்று சிறைவாசமும் – நெருக்கடிநிலை காலத்தில் ‘மிசா’ கைதியாக 14 மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

பூலாவரி ஊராட்சிமன்றத் தலைவர், கிராம கூட்டுறவு நாணய சங்கத் தலைவர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், 1962 தொடங்கி ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஒரு முறை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், மூன்று முறை வேளாண்மைத் துறை அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

“சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**